## அத்தியாயம் 24

Bonn நகரில் விவிட் செர்ரி ப்ளாசம் அவென்யூவில் நின்று கொண்டிருந்தான் வருண். இரு ஓரங்களிலும் நெடிதுயர்ந்த மரங்களில் பூத்து குலுங்கிய செர்ரி மலர் கொத்துகளை பார்க்கும் போது அவனுக்குள் ஒரு உற்சாகம் பிறந்தது.

தூரத்தில் அரவிந்தும் சூசனும் செல்ஃபி எடுத்து கொண்டிருக்க சூசன் "வருண் கம் ஹியர் ! லெட்ஸ் டேக் அ செல்ஃபி" என்று கூற அதை புன்னகையால் மறுத்தவனின் மனம் இப்போது போட்டோ எடுப்பதே வெறுத்து விட்டிருந்தது.

அந்த நிமிடத்தை அனுபவிக்காமல் போட்டோ எடுத்து அழகிய தருணங்களை இழக்க அவன் விரும்பவில்லை. அங்கே ஒரு பெண்ணும் அவளுடைய பாய் ஃப்ரெண்டும் செல்ஃபி எடுத்து கொண்டிருப்பதை பார்த்ததும் அவனுக்கு பழைய நினைவுகள் வந்து தொலைத்தது. கீதாவுடன் செல்ஃபி எடுக்கும் போதேல்லாம் அவள் குள்ளமாக இருப்பதால் வருண் சாய்ந்து நின்று தான் போஸ் கொடுப்பான். இந்த காதலர்கள் அந்த நினைவை அவனுக்குள் எழுப்பிவிட்டதால் அரவிந்தையும் சூசனையும் என்ஜாய் பண்ண சொல்லிவிட்டு அவன் வீடு திரும்பினான்.

ஃப்ரிட்ஜை திறந்து பாட்டிலை எடுத்தவன் மடமடவென்று வாயில் சரித்தான். அவனுக்கு குடிப்பதே பிடிக்காது ஒரு காலத்தில். ஆனால் இன்று அவனுக்கு அது தேவைப்பட்டது, கீதாவின் நினைவுகளை அழிக்க., கண்ணை மூடி மெத்தையில் சரிந்தவனின் காதில் " எனக்கு இந்த காதல் தேவையே இல்ல வருண்" என்ற கீதாவின் கண்ணீருடன் கூடிய முகம் வர, அதை மறக்க வேண்டி இன்னும் குடித்தான்.

ஆனால் அவன் ஒன்றை மறந்துவிட்டான் கீதாவின் நினைவுகளை அழிக்க மட்டுமல்ல மறக்க கூட அவனால் முடியாது என்பதை....

-----------------------------------------------------------------------------------------------------------

" பவா! கஷ்டமா இருந்தா குடு., குட்டி கண்ணாவை நானே வச்சிக்கிறேன் " என்று சொல்லி ரேணுகாவின் கையிலிருந்த குழந்தையை வாங்கி கொண்டாள் கீதா.,

அவனை தூக்கி கொண்டு அங்கும் இங்கும் நடமாடிய படியே அவனுட்டு விளையாட்டு காட்டி கொண்டிருந்தவளை கண்ணில் வலியுடன் பார்த்தாள்

ரேணுகா. வருணும், கீதாவும் வெளியே காட்டி கொள்ளவில்லையென்றாலும் அவர்கள் படும் துன்பம் ஏதாவது ஒரு வகையில் அவர்களின் நண்பர்களின் கண்ணில் பட தான் செய்தது.

பெருமூச்சு விட்டு கொண்டு எழும்ப முயன்றவளை யோகா வந்து கையை பிடித்து தூக்கி விட இருவரும் வராண்டாவுக்கு சென்று அமர்ந்து ஏதோ கதையை பேச ஆரம்பித்தனர்.

பிரியா தன்னுடைய அறையிலிருந்து வந்தவள் வருண் வீடியோ காலில் இருப்பதாக கூற மொத்த குடும்பமும் லேப்டாப் முன்னர் ஆஜரானது.

" அண்ணா! எப்பிடி இருக்கிங்க?? ஹவ் இஸ் ஜெர்மனி??" என்றாள் ரேணுகா.

" செமயா இருக்கேன் குட்டிமா., எங்க போனான் என்னோட மருமகன்??"

" அவன் தூங்கறான் அண்ணா" என்றாள் ரேணுகா கீதாவின் பெயரை சொல்லாமல்.

எப்போதும் போல அரட்டையை தொடங்க அவினாஷ் " மச்சி! இந்தியா வர்ர ஐடியா இருக்காடா?? நீ ஜெர்மனி போய் 6 மாசம் ஆச்சுடா., உன் மருமகனும் பொறந்து இப்போ நடக்கவே ஆரம்பிச்சிட்டான். பவா வளைக்காப்புக்கு கூட வராதவன் தானே" என்று வருத்தத்துடன் கேட்டான்.

அதற்கு அவன் புன்னகையை மட்டும் பரிசாக அளிக்கவே " ஆ ஊ னா இப்பிடி சிரிச்சு ஏமாத்திடுடா" என்று சலித்தான் அவினாஷ்.

" வருண்! உடம்பு ஏதும் சரியில்லையா? என்று கேட்டாள் யோகா.

" ஐயாம் ஆல்ரைட் யோகா., என்னை பாத்தா அப்பிடியா தெரியுது?" என்று கிண்டலாக கேட்டான்.

" டாட்! சீரியசா பேசுங்க" என்ற ஜேசியை பார்த்து " மகனே நெஜமாவே என்னோட உடம்புக்கு ஒன்னும் இல்ல. ஆக்சுவலி செர்ரி ப்ளாசம் பாக்க போனப்போ எனக்கு அலர்ஜி ஆயிடுச்சு. வேற ஒன்னும் இல்ல" என்று விளக்கினான் வருண்.

இவ்வாறு பேசிக் கொண்டிருக்கையில் கீதாவின் குரல் கேட்கவே அவன் கண்கள் அலைபாய தொடங்கியது.

" பவா! குட்டி கண்ணாக்கு பசிக்குதாம். கொஞ்சம் இங்க வாயேன்" என்று அவளது குரல் தெளிவாக காதில் விழ அவளது முகத்தை பார்க்கும் ஆர்வம் அவனது கண்ணில்  தெளிவாக தெரிந்தது.

ஆனால் கீதா வருவதற்கு முன் ரேணுகா சென்றதால் அவனால் கீதாவை பார்க்க இயலவில்லை.,

அவன் அறியாத ஒரு விஷயமும் இருந்தது. கீதாவே அவன் கண் முன் வரவிரும்பவில்லை என்பது தான் அது... அவன் பேசி முடித்து பிரியா லேப்டாப்புடன் சென்றதும் தன் அறைக்கு சென்றவளின் காதில் வருண் கடைசியாக பேசிய வார்த்தை படம் போல் விரிந்தது...

அன்று வருண் அழைத்ததும் சென்ற கீதா அவன் கார்த்திக்கை அவாய்ட் பண்ணுமாறு சொல்லும் போது பொசசிவ்நெஸ்ஸில் சொல்லுவதாகவே கருதினாள். அதை அவள் சீரியஸாக எடுத்து கொள்ளவில்லை.

அவன் அதில் பிடிவாதமாக இருக்கவும் " என்னால அப்பிடி யாரையும் சடன்னா அவாய்ட் பண்ண முடியாது வருண்" என்று இறுக்கமான குரலில் கூறவும் வருண் தன் எரிச்சலை வெளிப்படையாக தன் முகத்தில் காட்டினான்.

" ஏன்! நான் ஜெர்மனில இருந்தப்போ நீ ஒரு உப்பு பெறாத காரணத்துக்கு என்னை அவாய்ட் பண்ணல, அதெல்லாம் உனக்கு மறந்து போச்சா?"

" நீயும் கார்த்திக்கும் ஒண்ணா வருண்?"

" ஏய்! இந்த சால்ஜாப்பு எனக்கு தேவை இல்ல., அவனோட ஃப்ரெண்ட்ஷிப்பை கட் பண்ண முடியுமா இல்லையா??"

" ஐயாம் சாரி வருண்., உன்னோட சின்ன சின்ன இன்செக்யூரிட்டி ஃபீலுக்கு பயந்து நான் இன்னிக்கு கார்த்திக் ஃப்ரெண்ட்ஷிப்பை கட் பண்ணேனு வை நாளைக்கு நீ அவி, விக்கி, ஜேசியயும் இந்த மாதிரி சொல்ல மாட்டேனு என்ன நிச்சயம்?"

" இனாஃப் கீதா! அவங்களும் அந்த இடியட்டும் ஒன்னா??"

" எனக்கு எல்லாருமே ஃப்ரெண்ட்ஸ் தான் வருண்., என்னால கார்த்திக் ஃப்ரெண்ட்ஷிப்ப கட் பண்ண முடியாது"

" நீ இவ்ளோ உறுதியா சொன்னப்போ அவன் பேசுனது சரி தானு தோனுது. எப்பிடி பாத்தாலும் அவனும் நீயும் ரிலேட்டிவ்ஸ்., உங்க பழக்க வழக்கம், படிப்பு, புர:பஷன் எல்லாமே ஒன்னா இருக்கிறதால உனக்கே என்னை விட அவன் பெஸ்டுனு தோணுது அப்பிடி தானே?? உனக்கும் அந்த சரண்யாவுக்கு எந்த வித்தியாசமும் இல்ல. அவளும் பெட்டர் ஆப்ஷன் வந்ததும் அஜியை கழட்டி விட்டுட்டு போனா., இன்னிக்கு நீயும்.." என்று பேசியவனை கண்ணில் வலியுடன் இடை மறித்தாள் கீதா.

" நான் யாரு கூட பேசனும் பேசக் கூடாதுனு சொல்லுற ரைட்ஸ் உனக்கு இல்ல வருண்! நீ இப்போ சொன்னியே ஒரு வார்த்தை ! அது மட்டும் போதும், நம்ம காதலை கொச்சைபடுத்துறதுக்கு! இப்பிடி ஒரு லவ் எனக்கு தேவையில்லை வருண்! என்னால இதுக்கு மேல உன்னோட காரணம் இல்லாத கோவத்தை நெனச்சு பயப்பட்டுக்கிட்டே இருக்க முடியாது! எனக்கு நீயும் வேண்டாம்! உன்னோட லவ்வும் வேண்டாம்! இட்ஸ் ஓவர்! " என்று சொல்லிவிட்டு அழுது கொண்டே சென்றாள்.

கன்னம் ஈரமான பின் தான் உணர்ந்தாள் தான் அழுது கொண்டு இருக்கிறோம் என்று ... எப்போதும் போல கண்ணை துடைத்தவள் அமைதியாக வெளியே வந்து நண்பர்களுடன் பேச ஆரம்பித்தாள்..

அங்கே வருணோ தாங்கள் இறுதியாக சந்தித்த தருணத்தை நினைத்து பார்த்தான்., அதற்கு முந்தைய நாள் அந்த கார்த்திக் அவனிடம் பேசிய வார்த்தைகளையும் சேர்த்து தான்.

" நீ கீதாவ இன்னும் புரிஞ்சுக்கல வருண்! அவளுக்கு ரெண்டு வீக்னெஸ் இருக்கு. ஒன்னு :ப்ரெண்ட்ஷிப், இன்னொன்னு :பேமிலி. இத வச்சு அவளை எப்பிடி வேனாலும் ஆட்டி வைக்கலாம். யூ நோ ஒன் திங் டியூட், கீதா கிட்ட போய் நீயே என் கூட பேச வேண்டானு சொன்னாலும் அவ அத கேக்க மாட்டா. அந்த அளவுக்கு ஒரு நண்பனா நான் அவ மனசுல :பார்ம் ஆயிட்டேன். இன்னும் கொஞ்ச நாள் தான். அப்றம் எங்க :பேமிலிய காரணமா காட்டியே இன்னிக்கு நீ இருக்கிற எடத்துக்கு நான் வந்துடுவேன்,. உன்னால என்னை ஒன்னும் பண்ண முடியாது " என்று கார்த்திக் இளக்காரமாக சொல்ல வருணுக்கு உள்ளே கொதித்தது.

" நீ சொல்ற மாதிரி என்னிக்கும் நடக்காது. கீதா உன்னை நல்ல :ப்ரெண்டா நெனைக்கிறா. பட் நீ அத மிஸ்யூஸ் பண்ண பாக்குற. நான் இருக்கிற

வரைக்கும் இது எதுவுமே நடக்காது கார்த்திக். நாளைக்கே கீதா வந்து நம்ம ஃப்ரெண்ட்ஷிப் வேண்டானு உன் கிட்ட சொல்லுவா., வர்ரேன்" என்று சொல்லிவிட்டு வந்தவன் கீதாவிடம் அதை சொன்னபோது அவள் அதை நம்பவில்லை.

அதற்கு பின் நடந்த சம்பவங்களையும் நினைத்தவன் மனதிற்குள் சொல்லி கொண்டான் " ஐ ஹேட் யூ கீதா"...

இப்படி ஒரு மூன்றாவது மனிதனின் சதியால் அவர்களின் அழகான காதல் பிரிந்தது., அதை மறக்க நினைத்தவன் வெளியே சென்று வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.

---------------------------------------------------------------------------------------------------------------

மூன்று மாதங்களுக்கு பிறகு ....

அரவிந்த் கிறிஸ்மஸ் மார்க்கெட் செல்ல வேண்டும் என்று நச்சரித்து வருணையும் சூசனையும் அன்று மாலை தயாராக வைத்தான். அங்கே சென்றவர்கள் வேடிக்கை பார்க்க ஆரம்பிக்க சூசன் கடைகளுக்குள் சென்று ஷாப்பிங் செய்ய ஆரம்பித்தாள்.

வருண் வழக்கம் போல சுவாரசியமாக வேடிக்கை பார்த்து கொண்டிருந்தான். இந்த நிலையில் தான் மீனாட்சி அம்மாளுக்கு உடல்நலம் இல்லையென்ற தகவல் கிடைக்க அவன் வேகமாக இருவரிடமும் சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்தான். வந்தவன் தன் பொருட்களை பேக் செய்து விட்டு ஃப்ளைட் டிக்கெட் அவைலபிளிட்டி பற்றி விசாரிக்க டிக்கெட் கிடைத்தது.

அதற்குள் வீட்டுக்கு வந்த அரவிந்தும் சூசனும் பாட்டிக்கு ஒன்றும் ஆகாது என்று அவனை ஆறுதல் படுத்தி ஏர்ப்போர்ட் வரை வந்து அவனை ஃப்ளைட் ஏற்றிவிட்டனர். விமானத்திலிருந்தவனின் சிந்தனை முழுவதும் அவனது பாட்டியின் நலனை பற்றியே இருக்க சென்னை வந்ததும் நேரே ரயில்வே ஸ்டேஷன் சென்றவன் அன்ரிசர்வ்டில் பயணம் செய்து திருநெல்வேலி வந்து சேர்ந்தான்.

அவன் வந்த நேரத்தில் கீதா அங்கு இல்லை. அவளும் அவள் தோழிகளும் முந்தைய நாள் தான் அனுவை அழைத்து கொண்டு சென்னைக்கு சென்றனர்

என்று அவனது அம்மா கூற மனதில் ஏனோ ஒரு வெறுமையை உணர்ந்தான் வருண்...